


கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் துவக்கி வைத்தார். உடன் மாநில நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், சன்பிரகாஷ், ஜி.நாராயணன், பொன்.விஜயன், பேபிசேகர், டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், என்.இ.கே.மூர்த்தி, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், ஜி.ஆர்.திருமலை, தங்கம்முரளி, தி.வே.முனுசாமி, தி.வை.ரவி, இளைஞர் மாணவரணி மருத்துவ அணி அமைப்பாளர்கள் வி.தியாகராஜன், டாக்டர் க.ராஜேஷ்குமார், ஜி.துர்கா பிரசாத் உள்பட பலர் உள்ளனர்.

## விழுப்புரத்தில் தீ விபத்து!

### லட்சுமணன் எம்.எல்.ஏ. நிதியுதவி!

விழுப்புரம், அக். 26 -

விழுப்புரம் அருகே வி.அகரம் காலனி பகுதியைச் சேர்ந்தவர் அமுதா, கீதா இவர்களின் குடிசை வீடு மின் கசிவுக்காரணமாக நேற்று முன்தினம் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதில் வீட்டில் இருந்த பொருட்கள், கட்டில் உள்ளிட்ட பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமாகின.

இதனிடையே தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை லட்சுமணன் எம்.எல்.ஏ. சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து அரிசி, காய்கறி, மளிகை பொருட்கள் மற்றும் நிதி உதவி உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும் அரசு தரப்பில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

## நீட் தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம்!

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை!

திருவள்ளூர், அக்.26-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி இணைந்து நீட் தேர்வை ரத்துச் செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமையில் நாளை (27.10.2023) காலை 9.00 மணியளவில் திருவள்ளூர் சாலை ஊத்துக்கோட்டை பழனி பிரேமலதா திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநில ஆதிதிராவிட அணி செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. இதில் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

அதுசமயம் மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன் மு.கதிரவன் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி எம்.எல். ரவி எஸ்.ரமேஷ், மாநில நிர்வாகிகள் க.சுந்தரம் இ.ஏ.பி. சிவாஜி சி.எச். சேகர் ஜெ.மூர்த்தி கே.ஜி. பாஸ்கர் சுந்தரம் வெ.அன்புவாணன் கன்னிகை ஜி. ஸ்டாலின் ஏ.ஆர்.டி.உதயசூரியன் பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி பா.செ.குணசேகரன் பி.வெங்கடாசலபதி கே.சுப்பிரமணி டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் மு.மணிபாலன் டி.கே.சந்திரசேகர் பா.சுகுமாறன் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ். ஆ. சத்தியவேல் நா.செல்வசேகரன் கி.வே.ஆனந்தகுமார் கா.சு.ஜெகதீசன் ஜான் (எ) பொன்னுசாமி ந.பரிமளம் ஜி.ரவிக்குமார் இரா.அறிவழகன் பி.முத்து அபிராமி குமரவேல் க.சு தமிழ்உதயன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி கே.வி.லோகேஷ், மாவட்ட மாணவர் அணி ஆ.வெற்றி (எ) ராஜேஷ், மாவட்ட மருத்துவர் அணி என்.நில்சன் மற்றும் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென மாவட்டச் செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

## குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளர் எம்.செல்வம் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **டி.விஜயகண்ணன்**, (5/10/5, காந்திநகர், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் 638 183.)அவர்கள், குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிறநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### அக். 28-ஆம் தேதி மாலை குன்றத்தூரில் நடைபெறுகிறது

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 28.10.2023 சனிக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டபத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- வருகிற நவம்பர் 5 அன்று திருவள்ளூரில் முதல்வர் தலைவர் தளபதி தலைமையில் நடைபெறும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்பது குறித்து, நாடாளுமன்றத் தேர்தல் ஆக்கப் பணிகள், கழக வளர்ச்சி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் நாளை 27-10-2023 வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் சைதை பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளின் 'தொகுதி பொறுப்பாளர்கள்', மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்...

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

## மயிலை மேற்குப் பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் மதி அறிக்கை!

சென்னை, அக்.26-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி ஆலோசனை கூட்டம் இன்று (26.10.2023) மாலை 6:00 மணியளவில் அவை தலைவர் ஜி.ஆர். ராஜேந்திரன் தலைமையில் பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர்.எல்.வி.அசோக், ப.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: 29/10/2023 அன்று அன்பகத்தில் நடைபெற உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு குறித்து மற்றும் கழக ஆக்க பணிகள்

இடம்: மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலக வளாகம்

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி. கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருவல்லிக்கேணி பகுதியில்

## சுற்றித் திரியும் மாடுகளை பிடிக்கும் பணி!

### ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டார்!

சென்னை, அக். 26-

பெருநகர சென்னை மாநகராட்சி திருவல்லிக்கேணி பகுதியில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சுற்றித் திரியும் மாடுகளைப் பிடிக்கும் பணியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாடுகளை சாலைகளில் தன்னிச்சையாக விடுவதன் மூலம் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதோடு மக்களைத் தாக்கி விபத்தும், உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

இதனைத் தவிர்க்கின்ற வகையில் பெருநகர சென்னை மாகநகராட்சி சார்பில் உரிய சட்ட விதிகளின்படி தன்னிச்சையாக நடமாடும் மாட்டின் உரிமையாளர்கள் மீது அபராதம் விதித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனினும், சாலையில் தொடர்ந்து நடமாடும் மாடுகளால் பொதுமக்கள் தாக்கப்பட்டு காயமடையும் சூழல் ஏற்படுகிறது. இதனைத் தடுத்திடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களால் கள ஆய்வு மேற்கொண்டு மாடுகளைப் பிடித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, திருவல்லிக்கேணி பகுதியில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சுற்றித்திரியும் மாடுகளைப் பிடிக்கும் பணியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (25.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்பகுதியில் நேற்று மட்டும் 3 மாடுகள் பிடிக்கப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு தலா ரூ.5,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### இதுவரை ரூ.5 கோடியே 85 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் - உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டுவருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகைவழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 85 லட்சத்து 90 ஆயிரம். இந்தமாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 25.10.2023 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து போகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது..

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஜெ. ஆல்பட், கே.தெரு 416 முதல் 1516, கொருக்குப்பேட்டை, சென்னை – 21 | - 25,000/- |
| 2. | ச. காசி, சோலையப்பன் தெரு, தியாகராயர் நகர், சென்னை –17 | - 25,000/- |
| 3. | பி. ஹேமாவதி, தாசர்புரம் 3வது தெரு, திருநின்றவூர், திருவள்ளூர் – 602024. | - 25,000/- |
| 4. | என்.சம்பத்,பெரிய தெரு, தேசுமுகிப்பேட்டை, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு | - 25,000/- |
| 5. | முக்தார் அகமத், முகமத்புரா முதல் தெரு 3வது சந்து, ஆம்பூர், திருப்பத்தூர் | - 25,000/- |
| 6. | என்.கனகராஜ், கருப்பட்டிச்சேரி, தத்துவாஞ்சேரி, திருவிடைமருதூர், தஞ்சை | - 25,000/- |
| 7. | எம்.நாச்சிமுத்து, முத்துவேணிநகர் வாங்கல்ரோடு, பாலம்மாள்புரம், கரூர் | - 25,000/- |
| 8. | வி. சேகர், வடக்குமட விளாகத் தெரு, இலால்குடி, திருச்சி – 621 601. | - 25,000/- |
| | **மொத்தம்** | **ரூ. 2,00,000/-** |

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில்

## வாக்குச் சாவடி பாக முகவர்கள் பி.எல்.ஏ. 2 ஆய்வுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கும்முடிப்பூண்டி பொன்னேரி சட்டமன்ற தொகுதிகளின் வாக்குச் சாவடி பாக முகவர்கள் பி.எல்.ஏ 2 கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற உள்ளது. கும்முடிப்பூண்டி தொகுதியில் உள்ளடங்கிய கும்முடிப்பூண்டி மேற்கு, கும்முடிப்பூண்டி கிழக்கு, கும்முடிப்பூண்டி தெற்கு, எல்லாபுரம் வடக்கு எல்லாபுரம தெற்கு, பூண்டி கிழக்கு, பூண்டி வடக்கு, கும்முடிப்பூண்டி பேரூர் மற்றும் ஊத்துக்கோட்டை பேரூர் வாக்குச் சாவடிகளின் பாகமுகர்கள் (பி.எல்.ஏ2) கூட்டத்தில் கழக செய்தித் தொடர்பு துணைத் தலைவரும், தொகுதி பார்வையாளருமான பி.டி.அரசகுமார் பங்கேற்று ஆய்வு செய்கிறார். பொன்னேரி சட்டமன்ற தொகுதியில் உள்ளடங்கிய மீஞ்சூர் வடக்கு, மீஞ்சூர் தெற்கு, மீஞ்சூர் கிழக்கு, சோழவரம் வடக்கு, மீஞ்சூர் பேரூர், ஆரணி பேரூர் பொன்னேரி நகரம் வாக்குச் சாவடிகளின் பாகமுகர்கள் (பி.எல்.ஏ2) கூட்டத்தில் மாநில மாணவரணி துணை செயலாளர் தொகுதி பார்வையாளர் க.அமுதரசன் பங்கேற்று ஆய்வு செய்கிறார். மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அந்தந்த பகுதிகளில் நடைபெறும் ஆய்வு கூட்டங்களில் பங்கேற்கின்றனர். மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய , நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வாக்குச் சாவடி பாக முகவர்கள் பி.எல்.ஏ 2 அனைவரும் தவறாமல் ஆய்வுக் கூட்டங்களில் கீழ்கண்ட நாட்களில் உள்ள அட்டவணைபடி குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**பொன்னேரி தொகுதி**

| நாள் நேரம் | ஆய்வு நடைபெறும் இடம் | பங்கேற்கும் ஒன்றிய/ நகர/ பேரூர் |
|---|---|---|
| 30.10.2023 திங்கட்கிழமை காலை:10.00 மணி | மீஞ்சூர் வடக்கு ஒன்றிய கழக அலுவலகம், பொன்னேரி | மீஞ்சூர் வடக்கு பா.சுகுமாறன் |
| 30.10.2023 திங்கட்கிழமை மாலை: 3.00 மணி | ஆளவந்தார் திருமண மண்டபம் ஆண்டார்குப்பம் | சோழவரம் வடக்கு நா. செல்வசேகரன் ஆரணி பேரூர் பி.முத்து |
| 30.10.2023 திங்கட்கிழமை மாலை:5.00 மணி | மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய கழக அலுவலகம் வல்லூர் | மீஞ்சூர் கிழக்கு எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் |
| 31.10.2023 செவ்வாய்கிழமை மாலை:10.00 மணி | பொன்னேரி நகர கழக அலுவலகம், பொன்னேரி | மீஞ்சூர் தெற்கு கா.சு.ஜெகதீசன் பொன்னேரி நகரம் ஜி.ரவிக்குமார் |
| 31.10.2023 செவ்வாய்கிழமை மாலை: 3.00 மணி | ஏழில் திருமண மண்டபம், மீஞ்சூர் | மீஞ்சூர் பேரூர் க.சு.தமிழ்உதயன் |

**கும்முடிப்பூண்டி தொகுதி**

| நாள் நேரம் | ஆய்வு நடைபெறும் இடம் | பங்கேற்கும் ஒன்றிய/ நகர/ பேரூர் |
|---|---|---|
| 1.11.2023 புதன்கிழமை காலை: 03.00 மணி | ஏ.வி.எஸ்.திருமண மண்டபம் கும்முடிப்பூண்டி | கும்முடிப்பூண்டி மேற்கு மு.மணிபாலன் கும்முடிப்பூண்டி தெற்கு கி.வே.ஆனந்தகுமார் கும்முடிப்பூண்டி கிழக்கு ந.பரிமளம் கும்முடிப்பூண்டி பேரூர் இரா.அறிவழகன் |
| 2.11.2023 வியாழக்கிழமை மாலை: 3.00 மணி | லட்சமி திருமண மண்டபம் போந்தவாக்கம் | பூண்டி கிழக்கு டி.கே.சந்திரசேகர் பூண்டி வடக்கு ஜான்(எ) பொன்னுசாமி |
| 2.11.2023 வியாழக்கிழமை மாலை: 5.00 மணி | ஏ.என்.ஜி. திருமண மண்டபம் ஆத்துப்பாக்கம் | எல்லாபுரம் வடக்கு ஜெ.மூர்த்தி எல்லாபுரம் தெற்கு ஆ.சத்தியவேல் ஊத்துகோட்டை பேரூர் அபிராமி குமரவேல் |

**டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.**
செயலாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.